# <u>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை</u>
## <u>நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 2</u>
## <u>2026, மே 12, செவ்வாய்க்கிழமை</u>
## <u>சித்திரை 29, திருவள்ளுவர் ஆண்டு – 2057</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்** திரு. மு.வீ. கருப்பையா அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கின:–

**"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."**

(கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன் அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.)

1. <u>பேரவைத் தலைவர் தேர்தல்</u>

பேரவைத் தலைவர் தேர்தல் பதவிக்கான வேட்புத்தாள் சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சமர்பிக்கப்பட்டது குறித்தும், சட்டமன்றப் பேரவை விதி–7, உள்விதி 4–ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்கள்.

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | – | திரு. ஜே.சி.டி. பிரபாகர் |
| முன்மொழிந்தவர் | – | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் |
| வழிமொழிந்தவர் | – | மாண்புமிகு திரு. N. ஆனந்த், அமைச்சர் அவர்கள் |

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் மட்டும் மொழியப் பெற்று வேட்புத்தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் பேரவையின் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்கள்.

பேரவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கு தனது பாராட்டுதல்களை மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

2. <u>பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்</u>

பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் பதவிக்கான வேட்புத்தாள் சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது குறித்தும், பேரவை விதி–8, உள்விதி 2–ல் குறிப்பிட்டுள்ளவாறு, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்கள்.

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | – | திரு. மு. ரவிசங்கர் |
| முன்மொழிந்தவர் | – | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் |
| வழிமொழிந்தவர் | – | மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் |

..2

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. மு. ரவிசங்கர் அவர்கள் மட்டும் நியமனம் செய்து வேட்புத்தாள் பெறப்பட்டுள்ளதால் திரு. மு. ரவிசங்கர் அவர்கள் பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்கள்.

பேரவையின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கு தனது பாராட்டுதல்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை திரு. செ. ராஜேஷ் குமார், திரு. எஸ். காமராஜ், திரு. ஆர். செல்லசுவாமி, திரு. வன்னி அரசு, திரு. SSB. சையது பாரூக் பாஷா, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. தி.மு. இராசேந்திரன், திரு. மு. தமிமுன் அன்சாரி, திரு. எம். போஜராஜன், திரு. K. நித்தியானந்தன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி, திருமதி பிரேமலதா விஜயகாந்த், திரு. எடப்பாடி K. பழனிசாமி, திரு. எஸ்.பி. வேலுமணி மற்றும் திரு. உதயநிதி ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகியோர் ஏற்புரை வழங்கினார்கள்.

பேரவை முற்பகல் 11.11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பேரவை மீண்டும் 2026–ஆம் ஆண்டு மே **திங்கள் 13–ஆம்** நாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**